# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- புவியியல்**

சுட்டெண்:....................... **தரம் – 08** **நேரம் : 02 மணி**

**பகுதி - I**

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் எத்தனை வருடங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகிறது
 1. 460 மில்லியன் வருடங்கள் 2. 4600 மில்லியன் வருடங்கள்
 3. 460 வருடங்கள் 4. 4600 வருடங்கள்

02. வால்வெள்ளியின் மறுபெயர் யாது?
 1. தூமகேது 2. எரிகல் 3. குறுங்கோள் 4. நுண்கோள்

03. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை யாது?
 1. $15^0C$ 2. $150^0C$ 3. $6000^0C$ 4. $600^0C$

04. சூரியனுக்கு மிக அண்மையில் அமைந்திருக்கும் கோள் யாது?
 1. வெள்ளி 2. சனி 3. செவ்வாய் 4. புதன்

05. காபனீரொட்சைட் (96%) அதிகளவில் காணப்படும் கோள் எது?
 1. சனி 2. வெள்ளி 3. வியாழன் 4. யுரேனஸ்

06. அழகான வளையங்களாலான கோள் எது?
 1. புதன் 2. சனி 3. யுரேனஸ் 4. வியாழன்

07. பிரபஞ்சம் தொடர்பான ஆய்வில் திருப்புமுனையாக அமைந்த தொலைநோக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
 1. குளோடியஸ் தொலமி 2. ஐசாக் நியூட்டன்
 3. கலிலியோ கலிலி 4. கெப்ளர்

08. புவியின் பரப்பளவு யாது?
 1. 510 மில்லியன் சதுர கிலோமீற்றர் 2. 410 மில்லியன் சதுர கிலோமீற்றர்
 3. 520 மில்லியன் சதுர கிலோமீற்றர் 4. 610 மில்லியன் சதுர கிலோமீற்றர்

09. $0^0$ அகலக்கோடு எவ்வாறு அழைக்கப்படும்
 1. மத்திய கோடு 2. கடகக் கோடு
 3. கிறீன் வீச் கோடு 4. மகரக் கோடு

10. புவியில் இரவும் பகலும் தோன்றக் காரணம் யாது?
 1. புவிச்சுற்றுகை 2. புவிச்சுழற்சி
 3. சூரியப்புயல்கள் 4. எரிமலை வெடிப்பு

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**02. கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையினை இடுக.**

(புவி, சூரியன்,ஐக்கிய அமேரிக்கா, ரஸ்யா, செவ்வாய்)

11. முதன் முறையாக விண்வெளி தொடர்பாக ஆய்வு செய்தவற்காக செயற்கைக் கோள் ஒன்றை அனுப்பிய நாடு ......................... ஆகும்
12. புவியில் உயிர்வாழ்க்கைக்கு அவசியமான சக்தியை வழங்கும் முதல் ........................ ஆகும்
13. நாசா விண்வெளி ஆய்வுமையம் காணப்படும் நாடு .......................... ஆகும்
14. செங்கோள் என அழைக்கப்படும் கோள் ............................ ஆகும்.
15. நீலக்கோள் என அழைக்கப்படும் கோள் ............................ ஆகும்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**03. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

16. செவ்வாய் கோளிற்கு பொபோஸ், டெமோஸ் ஆகிய இரு உப கோள்கள் உள்ளன. ( )
17. புறக் கோளின் முதலாவது கோளாக புவி அமைந்துள்ளது. ( )
18. புவியைப் போன்று 10 மடங்கு பெரிய 9ஆவது கோள் தொடர்பான தகவலை வெளியிட்ட நிறுவனம் நாசா ஆகும். ( )
19. புவியின் மத்திய கோட்டு விட்டம் 12 756 Km ஆகும். ( )
20. கிழக்கில் இருந்து மேற்காக சுழலும் இயல்பு கொண்ட கோள் வெள்ளி ஆகும். ( )

(5 x 2 = 10 புள்ளிகள்)

Education கல்வி

## பகுதி - II

**01. முதலாம் வினாஉட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

வழங்கப்பட்ட உலகப்புற உருவப்படத்தில் ஆங்கில எழுத்துக்களினால் அடையாளமிடப்பட்டுள்ள அம்சங்களை இனங்கண்டு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை அடைப்புக்குள் இடுக.

1. இலங்கை ( )
2. அவுஸ்திரேலியா ( )
3. இந்து சமுத்திரம் ( )
4. மகரக் கோடு ( )
5. இந்தியா ( )
6. பாக்கு நீரினை ( )

(6 x 2 = 12 புள்ளிகள்)

**02.**

1. ஞாயிற்றுத் தொகுதியில் காணப்படும் வான் பொருட்கள் 03 தருக.
2. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களை ஒழுங்கு வரிசையில் தருக.
3. கோள்களுக்கும், நச்சத்திரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

**03.**

1. அகக் கோள்களைக் குறிப்பிடுக.
2. புறக் கோள்களைக் குறிப்பிடுக.
3. வெள்ளிக் கோளின் சிறப்பியல்புகள் 04 தருக.

(4+4+4 = 12 புள்ளிகள்)



kalvi.lk

**04.**

1. சிறு கோள்கள் என்றால் என்ன?
2. சிறு கோள்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. சூரியனையும் சந்திரனையும் அடிப்படையாகக் கொண்ட சமய நம்பிக்கைகள் 04 தருக.

(4+4+4 = 12 புள்ளிகள்)

**05.**

1. தொலைநோக்கியை கண்டுபிடித்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு?
2. விண்வெளி தொடர்பான ஆய்வில் ஈடுபட் ஆய்வாளர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
3. ஞாயிற்றுத் தொகுதி தொடர்பான நவீன கண்டுபிடிப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(4+4+4 = 12 புள்ளிகள்)

**06.**

1. புவிச் சுழற்சி என்றால் என்ன?
2. புவிச் சுழற்சி காரணமாக ஏற்படும் நிகழ்வுகள் 02 தருக.
3. புவியில் உயிரினங்கள் நிலைத்திருப்பதற்கான காரணங்கள் 04 தருக.

(4+4+4 = 12 புள்ளிகள்)

**07.**


1. அகலக்கோடு என்றால் என்ன?
2. நெடுங்கோடு என்றால் என்ன?
3. $15^0$ நெடுங்கோட்டுக்கான நேர வேறுபாடு யாது?
4. உலகின் உள்ளூர் நியம நேரத்தை பயன்படுத்தும் நடுகள் 03 தருக.

(3+3+3+3 = 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk






kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 8**

**திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.**

**FREE ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page